[பேரவைத் தலைவர்] [1992 பிப்ரவரி 4

விதிப்படிதான் அனுமதிக்க முடியும். விதியை மீறி அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) இப்போது அவரை இளம்வழுதியை—வெளியேற்ற உத்தரவிடுகிறேன். அவரை வெளியேற்ற மார்ஷலுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) (பின்னர் அவைக் காவலர்களால் திரு. இளம்வழுதி வெளியேற்றப்பட்டார்).

முற்பகல் 11-20

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) மதிப்பீட்டுக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. வ. சத்தியமூர்த்தி, மதிப்பீட்டுக் குழு தலைவர்.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான், "சாலைகளும் பாலங்களும்" குறித்து 1985-86 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழு அளித்த நான்காவது அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான மேற்படி குழுவின் முதலாவது அறிக்கையைக் குழுவின் சார்பாக, பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் லாபியிலிருந்து பத்திரிகையாளர்களைச் சந்திப்பது மரபல்ல. அப்படி ஏதேனும் பத்திரிகையாளர் சந்திப்பு மரபியல் இருந்தால் அதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் 1985-86 ஆம் ஆண்டிற்கான